01. ஒவ்வொரு கிறிஸ்தவரின் வாழ்விலும் இடம்பெற வேண்டிய திருவருட்சாதனம்?

**திருமுழுக்கு**

02. திருவருட்சாதனங்கள் 7யும் தருக?

**திருமுழுக்கு, ஒப்புரவு, நற்கருணை, உறுதிப்பூசுதல், நோயிற்பூசுதல், குருத்துவம், திருமணம்**

03. ஒருமுறை மட்டும் பெறுகின்ற திருவருட்சாதனங்கள் எவை?

**திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், குருத்துவம், திருமணம்**

04. எண்ணெய் பூசி அருட்பொழிவு செய்தல் எந்தெந்த அருட்சாதனங்களில் பயயன்படுத்தப்படுகின்றது?

**திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், நோயிற்பூசுதல், குருத்துவம்**

05. திருமுழுக்கின் போது தூயஆவியாரால் முத்திரையிடப்பட்டதன் காரணம் என்ன?

**இறைவனின் பிள்ளைகள் என்று முத்திரையிடப்பட்டிருக்கின்றோம். அம்முத்திரை அழியாதது.**

06. தூயஆவியார் எவ்வாறு செயலாற்றுகின்றார்?

**கடவுளின் திருவுளத்தை வெளிப்படுத்தி அதன்வழி நடக்கத் துணை செய்கின்றார்**

07. திருமுழுக்கின் வழியாக நாம் யார் யாருடன் உறவு கொள்கின்றோம்?

**திருச்சபையின் அங்கத்தவராகின்றோம், இறைவனின் பிள்ளைகளாகின்றோம், கிறிஸ்துவின் நண்பர்கள், சகோதரர்களாகின்றோம்**

08. இயேசு இவ்வுலகை விட்டு விண்ணகம் செல்லும் முன் இறுதியாகக் கொடுத்த கட்டளைகளுள் முக்கியமானது என்ன?

**விண்ணிலும் மண்ணிலும் சகல அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருகின்றது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் என் சீடராக்குங்கள். தந்தை, மகன்,தூய ஆவியின் பெயரால் திருமுழுக்க்க கொடுங்கள்.**

09. திருமுழுக்கு எனும் நுழைவாயில் வழியாக நாம் செல்வது?

**திருச்சபைக்குள் ஓர் அங்கத்தவராகச் செல்கின்றோம்.**

10. திருமுழுக்குப் பெற்ற பின் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் கிடைக்கும் பெயர் யாது?

**கிறிஸ்தவர்**

11. திருமுழுக்கின் போது தூய ஆவியால் நாம் **<u>கடவுளின் பிள்ளைகள்</u>** என முத்திரையிடப்படுகின்றோம்.

12. திருமுழுக்கு என்றால் என்ன?

**எமது சென்ம பாவம் கழுவப்பட்டு திருச்சபையின் ஓர் அங்கத்தவராக வரவேற்கப்படுகின்ற நிகழ்வு திருமுழுக்கு எனப்படும்.**

13. திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் பொருட்கள் எவை?

    **கிறிஸ்மா தைலம், வெள்ளை ஆடை, நீர், பாஸ்கா மெழுகுதிரி**

14. **"நீங்களும் உங்களுக்கு மீட்பளிக்கும் நற்செய்தியாகிய உண்மையின் வார்த்தையைக் கேட்டு. அவர்மீது நம்பிக்கை கொண்டு, வாக்களிக்கப்பட்ட தூயஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டு இருக்கின்றீர்கள்."**
15. ஆவியானவரின் வடிவங்கள் எவை? **புறா, நெருப்பு, நீர், காற்று**
16. இறையரசின் மதிப்பீடுகள் எவை? **அன்பு, நீதி, பகிர்வு, சமத்துவம், சகோதரத்துவம்**

17. தொடக்கத்தில் கடவுளின் ஆவி எவ்வாறிருந்தது?

    **மண்ணுலகு உருவமற்று வெறுமையாய் இருந்தது. நீர்திரளின் மீது ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது.**

18. உலகப்படைப்பில் கடவுளின் ஆவி எவ்விதம் செயற்பட்டது?

    **படைப்பினை உருவாக்குபவராக, அவற்றிற்கு உயிரளிப்பவராகச் செயற்பட்டார். படைப்புக்கள் சமநிலை அடைய ஆவியின் அசைவாடுதல் அவசியமாயிருந்தது.**

19. மோசேயின் வாழ்வில் தூய ஆவியானவர் செயற்பட்ட விதத்தினை விளக்குக?

    **மோசேயின் பிறப்பு, வளர்ப்பு, அழைப்பு, இஸ்ராயேல் மக்களை வழிநடத்துதல், பத்துக்கட்டளை பெறுதல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.**

20. மோசே இஸ்ராயேல் மக்களை வழிநடத்த எத்தனை பேரை நியமித்தார்?

    **700 பேரைத் தேர்ந்தெடுத்து தன்னில் செயற்பட்ட ஆவியை அவர்களுக்கு வழங்கினார்.**

21. இஸ்ராயேல் ஆண்டவரை மன்றாட அவர் அவர்களை மீட்க நீதித்தலைவர்களில் யாரை அனுப்பினார்? **ஒத்தோனியேலை**
22. **"ஆண்டவரின் ஆவி அவருடன் ( ஒத்தோனியேல்) இருந்தது. அவர் இஸ்ராயேலருக்கு நீதி வழங்கினார்"**
23. எப்போதும் மனிதனில் ஒளி பிரகாசம் தோன்ற வேண்டுமென்றால் ஆவியின் <u>அருட்பொழிவு/நிழலிடுதல்</u> அவசியம் தேவை.

24. **"சாமுவேல் கொம்பினால் செய்யப்பட்ட எண்ணெய்க் கிண்ணத்தை எடுத்து ….. தாவீதை அபிசேகம் செய்தார். அன்றுமுதல் ஆண்டவருடைய ஆவி தாவீதின் மேல் இறங்கி எப்போதும் இருந்தது."**

25. கடவுளின் சார்பாக இஸ்ராயேலை ஆட்சி செய்தவர்கள் யார்? **அரசர்கள்**

26. தாவீதை அபிசேகம் செய்தவர் யார்? **சாமுவேல்**

27. தாவீது எத்தனை முறை திருப்பொழிவு செய்யப்படுகின்றார்? **மூன்று முறை**

28. இறைவாக்கினர் என்போர் யாவர்?

**கடவுளால் அழைக்கப்பட்டு, அவரது ஆவியால் நிரப்பப்பட்டு கடவுளின் நாவாகச் செயல்பட்டவர்கள். உடன்படிக்கையின்படி வாழ மக்களுக்கு அறைகூவல் விடுத்தவர்கள்.**

29. இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து மக்களுக்கும் உரியவர் என்பதினை எடுத்துரைக்கும் இறைவாக்கினர் யார்? **இறைவாக்கினர் யோவேல்**

30. நீதித்தலைவர்களை கடவுளின் ஆவி எப்படி வழிநடத்தினார்?**இஸ்ராயேல் மக்களைக் கடவுளின் பாதையில் வழிநடத்துவதற்கு ஏற்ற வகையில் தூய ஆவியார் நீதித்தலைவர்களை வழிநடத்தினார்**

31. அரசர்கள் வழியாகக் கடவுளின் ஆவி எவ்வாறு செயல்பட்டார்? **தூயஆவியானவரே அரசர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் கடவுளின் சார்பாக இஸராயேலை ஆட்சி செய்தனர்.**

32. ஆவியால் நிரப்பப்பட்ட இறைவாக்கினர்கள் என்னென்ன பணிகளைச் செய்தனர்?**கடவுளின் சார்பாக மக்களிடம் சென்று அவர்களின் அநீதிகளை எடுத்துக்கூறி மனமாற்றத்திற்காக அவர்களை அழைத்து, கடவுளோடு செய்து கொண்ட உடன்படிக்கையின்படி வாழ அறைகூவல் விடுத்தார்கள்.**

33. கடவுளின் ஆவி இன்று உன்னில் எவ்வாறு செயல்படுகிறார்?**அவர் நம் உள்ளங்களில் ஆவியை ஊட்டுகின்றார். கல்லான இதயத்தை எடுத்துவிட்டு உணர்ச்சியுள்ள இதயத்தைக் கொடுக்கின்றார். தமது வல்லமையால் நம்மைப் புதுப்படைப்பாக மாற்றுகின்றார். தம்முடைய பணிக்காக நம்மை அழைக்கின்றார்.**

34. **"மாந்தர் யாவர் மேலும் நம் ஆவியைப் பொழிந்திடுவோம். உங்கள் புதல்வர், புதல்வியர் இறைவாக்குரைப்பர்"– இறைவாக்கினர் யோவேல்**

35. **"உமது ஆற்றலை விட்டு நான் எங்கே செல்லக்கூடும், உமது முன்னிலிருந்து நான் எங்கே தப்பியோட முடியும்"**இங்கு **ஆற்றல்** என்பது **ஆவியானவரைக்** குறிக்கின்றது.

36. திருப்பாடலில் ஆற்றல் என்று குறிப்பிடுவது எதனை? **தூய ஆவியானவரை**

37. யேசுவின் பிறப்பில் தூய ஆவியானவர் எவ்வாறு செயற்பட்டார்?

**இவர் தூய ஆவியாரால் கர்ப்பமாய் உற்பவித்து புனித மரியாவிடமிருந்து பிறந்தார்.**

38. இயேசுவின் வளர்ச்சியில் தூய ஆவியின் செயற்பாடானது குறிப்பிடுவது?

**இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.**

39. திருமுழுக்கின் போது எதற்காக இயேசு ஆவியால் அருட்பொழிவு செய்யப்பட்டார்? **தமது பணி வாழ்வை ஆரம்பிப்பதற்கு உறுதுணையாகவும் மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு ஏதுவாகவும் ஆவியால் அருட்பொழிவு செய்யப்பட்டார்.**

40. இயேசுவின் வாழ்வில் அவருக்கு ஏற்பட்ட சவால்கள் அனைத்தையும் வெல்ல உறுதுணையாக இருந்தவர் யார்? **தூய ஆவியானவர்**

41. "ஆண்டவரின் ஆவி என்மேலுள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார்" என தமது பணி பற்றி இயேசு கூறியது? **நாசரேத்தூர் செபக்கூடத்தில்**

42. ஆவியின் வல்லமையால் இயேசு **<u>கலிலேயாவிற்குத் திரும்பிப்</u>** போய் அவர்களுடைய செபக்கூடங்களில் கற்பித்து வந்தார்.

43. இயேசுவின் உயிர்ப்பில் தூய ஆவியின் செயற்பாடு யாது?

**தூய ஆவியின் வல்லமையால் இயேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.**

44. "தந்தையே உமது கையில் **<u>என் ஆவியை ஒப்படைக்கின்றேன்</u>"**

45. இயேசு தமது பணி எதுவென எங்கு, எவ்விடத்தில் அறிக்கையிடுகின்றார்?

**ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" என நசரேத்தூர் செபக்கூடத்தில் இயேசு அறிக்கையிட்டார்.**

46. இயேசுவின் இறப்பும் உயிர்ப்பும் ஆவியின் வல்லமையால் நடைபெற்ற மீட்பின் நிகழ்ச்சி – எவ்வாறு? **ஆவியின் ஆற்றலால் வல்லமையால் "தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்"எனக் கூறி தம் உயிரைக் கையளித்தார்.ஆவியின் வல்லமையால் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.**

47. ஆவியின் அருட்பொழிவு பெற்ற இயேசு ஆற்றிய பணி என்ன? **அவர்களுடைய செபக்கூடங்களில் கற்பித்து வந்தார், பேய்களை ஓட்டினார், நோய்களைக் குணமாக்கினார், இறந்தவர்களை உயிர்ப்பித்தார், அற்புதங்கள் செய்தார்.**

48. யேசு வாக்களித்த துணையாளர் எத்தகையவர்?

**இயேசுவின் பணிவாழ்வு முழுவதும் அவரில் செயலாற்றியவர், இவ்வுலகில் இறையரசை உருவாக்க இயேசுவுக்கு ஆற்றலைத் தந்தவர்.**

49. இயேசுவின் வாழ்வில் செயலாற்றிய தூய ஆவி எம்மில் செயலாற்றுவது எவ்விதம்? **கடவுளின் திருவுளத்தை வெளிப்படுத்தி அதன்வழி நடக்க துணை செய்கின்றார்.**

50. பெந்தகோஸதே நாளன்று நிகழ்ந்தது என்ன? **திருத்தூதர்களும், இயேசுவின் தாய் மரியாவும், மற்றும் பல பெண்களும் கூடியிருந்தபோது தூய ஆவியானவர் அவர்கள் மீது இறங்கினார்.**

51. "இயேசு ஞானத்திலும் **உடல்வளர்ச்சியிலும்**மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்"

52. இயேசு வாக்களித்த ஆவியானவரை திருத்தூதர்கள் எப்போது பெற்றுக் கொண்டார்கள்? **பெந்தகோஸ்து நாளில்**

53. தூய ஆவி இறங்கிய போது அங்கு கூடியிருந்தவர்கள் யாவர்?

**திருத்தூதர்கள், சீடர்கள், இயேசுவின் தாய் மரியா, இன்னும் பல பெண்கள்**

54. நிரப்பப்படுதல் என்பது?

**ஆவியின் கொடைகளை நிறைவாக, முழுமையாகப் பெறுதலைக் குறிக்கின்றது.**

55. தூய ஆவியைப் பெற்றதன் அடையாளமாக சீடர்கள் **அயல் மொழிகளில்** பேசத் தொடங்கினர்.

56. திருத்தூதர்கள் ஆவியின் வல்லமையினைப் பெற்றதனால் **இயேசுவே ஆண்டவர்**என்று போதித்தனர்.

57. ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை யாது?

**நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களும் பிற உடைமைகளையும் உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப பகிர்ந்தளித்தனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள். இறைவார்த்தையைக் கேட்டனர், அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் நிலைத்திருந்தனர்.**

58. "மாந்தர் யாவர் மேலும் நம் ஆவியைப் பொழிவோம்" என்று இறைவாக்குரைத்த இறைவாக்கினர் யார்?

**இறைவாக்கினர்யோவேல்**

59. தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுதல் என்பதன் அர்த்தம் என்ன?

**செபத்தின மூலம் பெறும் இறையனுபவத்தின் உச்சக்கட்டடமே தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகும்.**

60. அயல் மொழிகளில் பேசுதல் ஆவியின் கொடைகளில் ஒன்றாகும், எவ்வாறு?

**தூயஆவியாரே ஒருவருக்கு பல்வகைப் பரவசப் பேச்சு பேசும் ஆற்றலை அளிக்கின்றார் ஆகையால் அவரது கொடையினாலேயே ஒருவர் அயல் மொழியில் பேசமுடியும்**

61. தூய ஆவியைப் பெற்ற திருத்தூதரிடையே ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?

**'இயேசுவே ஆண்டவர்' என்ற நற்செய்தியைப் போதித்தனர். தொடக்கத்தில் வீடுகளிலும், கோவில்களிலும் போதித்தவர்கள் பின்னர் உலகின் பல பகுதிகளுக்கும் சென்று போதித்து அதற்காகத் தம் உயிரைக் கையளிக்கவும் துணிந்தனர்.**

62. **"நாங்கள தூதுரைப்பது எங்களைப் பற்றியன்று, இயேசுகிறிஸ்துவே ஆண்டவர் எனத் தூதுரைக்கிறோம்"**

63. கிறிஸ்தவம் என்றால் என்ன?**வாழ்வோர் தங்களுக்கென்று வாழாது தமக்காகப் பாடுபட்டு,இறந்து, உயிருடன் எழுந்த இயேசு கிறிஸ்துவுக்காக அவர் காட்டிய வழியில் வாழ்வதே கிறிஸ்தவமாகும்.**

64. திருத்தூதர்கள் எப்படிப்பட்டவர்களுக்கு தூயஆவியை வழங்கினார்கள்?

**திருத்தூதர்களுடைய போதனைகளைக் கேட்கவும், புதுவாழ்வு வாழவும் விரும்பிய மக்களுக்கு தூயஆவியை வழங்கினார்கள்.**

65. திருத்தூதர்கள் பேதுருவும், யோவானும் சமாரியா சென்றதன் காரணம் என்ன?

**கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு திருமுழுக்கு மட்டுமே பெற்றிருந்த சமாரியருக்கு தூயஆவியை வழங்குவதற்காகச் சமாரியா சென்றனர்.**

66. எபேசு நகரிலுள்ள மக்களுக்கு தூய பவுல் எவ்வாறு தூயஆவியை வழங்கினார்?**திருமுழுக்கு மட்டுமே பெற்றிருந்த கிறிஸ்தவர்களின் தலைக்கு மேல் கைகளை வைக்கவே, அவர்கள் தூயஆவியைப் பெற்றுக் கொண்டார்கள்,**

67. சமாரியர்கள் தூய ஆவியைப் பெற்றுக்கொள்ள அனுப்பப்பட்டவர்கள் யார்? **பேதுருவும் யோவானும்**

68. பவுல் தூய ஆவியின் அருளைப் பெற்றுக் கொடுத்தது? **எபேசு நகர மக்களுக்கு**

69. உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனத்தின் மூலம் நடைபெறுவது? **தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு அவரை அனுபவித்து மகிழ்ந்து மாற்றம் பெறுவதாகும்.**

70. மறு உலக வாழ்விற்காக பயணித்துக் கொண்டிருக்கும் நமக்கு திருமுழுக்கிலே பெற்ற அருள்பொழிவினால் கிடைக்கும் நன்மைகள் யாவை?

**நாம் அரச குருத்துவ திருக்கூட்டமாக மாறுகின்றோம்.**

71. அருள்பொழிவு பெற்றவரின் சிறப்பியல்புகள் யாது?

**நன்மை செய்தல், மன்னித்தல்**

72. அரசராக்கும் அருட்பொழிவு பெற என்ன செய்ய வேண்டும்? அதனால் கிடைப்பது யாது?**இறைவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அதனால் எமக்கு மண்ணுலகில் வாழும் ஆற்றல் கிடைக்கின்றது.**

73. குருவாக்கும் அருட்பொழிவு பெற என்ன செய்ய வேண்டும்? அதனால் கிடைப்பது யாது?**இயேசுவோடு நட்புறவு கொள்ள வேண்டும் அதனால் இறை பிரசன்ன உணர்வு கிடைக்கின்றது.**

74. குணம் பெறும் அருட்பொழிவு பெற என்ன செய்ய வேண்டும்? அதனால் கிடைப்பது யாது?**இயேசுவை மீட்பராக ஏற்றுக்கொள்ள வேண்டும் அதனால் ஆன்மாவிற்கு மீட்பும், உடலுக்கு குணம் பெறுதலும் கிடைக்கின்றது.**

75. அருட்பொழிவு பெற்றவர்கள் கவனிக்க வேண்டியவை யாது?

- **இறைவனின் கோபத்திற்கு ஆளாகாதவாறு தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்,**
- **கடவுளின் கட்டளையை மீறும் போது கடவுளின் ஆவி நம்மை விட்டு விலகுவதுடன் தீய ஆவியும் நம்மைப் பிடித்துக் கொள்ளும் அபாயம் இருக்கின்றது என்பதில் விழிப்பாயிருக்க வேண்டும்,**
- **அருள்பொழிவு பெற்றவர்களுக்கு தூய ஆவியார் கோழை உள்ளத்தை அருளவில்லை என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்**
- **எல்லா சூழலிலும் தூயஆவியை நம்மிடமிருந்து எடுத்து விடாதபடி செபிக்க வேண்டும்.**

76. தூயஆவி நமக்கு அருளும் கொடைகள் யாவை?

**ஞானம், புத்தி, அறிவு, திடம், பக்தி, விமரிசை, தேவபயம்**

77. தூயஆவியின் கொடைகளினால் என்னென்ன பெறுகின்றோம்?

- **ஞானம், - கடவுளின் வழியை அறிதல், அதன் அடிப்படையில் நம் வாழ்விற்கு முக்கியமானது எது, முக்கியமற்றது எது என உய்த்துணர்தல்.**

- **புத்தி - அனைத்தையும் கடவுள் நோக்குவது போல் நாமும் நோக்குதல். அனைத்து நிகழ்வுகளிலும் இறைவன் செயற்படுவதை ஆய்ந்து அறிதல்.**
- **அறிவு- நாம் வாழும் உலக சூழலை அறிதல், அதன் அடிப்படையில் கடவுளின் அரசை உருவாக்குதல்.**
- **திடம் - இடர்கள் நேரிடினும் கடவுளின் விருப்பத்தைத் துணிவுடன் நிறைவேற்றுதல்**
- **பக்தி -கடவுள் மீது பற்றுறுதி கொண்டு அவருக்கு முற்றிலும் நம்மை அர்ப்பணித்தல்**
- **விமரிசை– நல்லவற்றைத் தேர்ந்து தெளிதல், தீயனவற்றை இனம் கண்டு அகற்றுதல்.**
- **தெய்வபயம் - கடவுளது மகிமையையும், அவரது பேரன்பையும் வியந்து போற்றுதல்**

78. ஆவியின் வரங்கள் சிலவற்றைக் கூறுக?

**இறைவாக்குரைக்கும் ஆற்றல், நோயைக் குணமாக்கும் வரம், புதுமை செய்யும் ஆற்றல், ஞானம் நிறைந்த பேச்சு, பரவசப் பேச்சு, அதை விளக்கும் திறன், ஆவிகளைத் தேர்ந்து தெளியும் திறன்.**

79. ஆவியின் வரங்கள் நமக்கு எதற்காக அருளப்படுகின்றது?

**திருச்சபையின் பொது நன்மைக்காகவும், சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவுமே அருளப்படுகின்றது.**

80. தூயஆவி நம்மில் விளைவிக்கும் கனிகள் யாவை?

**அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம்.**

81. தூயஆவி எதற்காக நமக்கு கொடையாக அருளப்பட்டார்?**இயேசுவையும், அவர் தந்த நற்செய்தியையும் அறியவும், இறைவனை அன்பு செய்யவும், உயிருள்ள சாட்சிகளாக இவ்வுலகில் வாழவும் தூயஆவி நமக்குக் கொடையாக அருளப்பட்டுள்ளார்.**

82. ஞானம் என்றால் என்ன?

**கடவுளின் வழியை அறிதல், அதன் அடிப்படையில் நம் வாழ்விற்கு முக்கியமானது எது, முக்கியமற்றது எது என உய்த்துணர்தல்**

83. நம்மைப் பிறருடன் உறவு கொள்ளவைக்கும் கனிகள் எவை?

**பொறுமை, பரிவு, நன்னயம்**

84. நம்மை இறைவனோடு உறவு கொள்ளவைக்கும் கனிகள் எவை?

**நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம்**

85. நமது உள்ளத்தில் நிறைவேறி நமக்குப் பலனளிக்கின்ற கனிகள் எவை?

**அன்பு, மகிழ்ச்சி, அமைதி**

86. இறைவனின் உள்ளார்ந்த ஆசீர்வாதங்களை நாம் எதன் வழியாகப் பெறுகின்றோம்?

**தூய ஆவியின் கனிகள், கொடைகள், வரங்கள் வழியாக**

87. ஒரு கிறிஸ்தவன் எவ்விதம் வாழும் போது ஆவியின் கனிகளால் நிரப்பப்பட்டு வாழ்வில் சுவை உள்ளவனாகத் திகழ்கின்றான்? **ஒரு கிறிஸ்தவன் இன்பத்திலும், துன்பத்திலும்,சோதனையிலும்,வேதனையிலும், இயலாமையிலும், இல்லாமையிலும், ஏமாற்றங்களிலும், எதிர்பார்ப்புகளிலும் கூட ஆவியானவரின் அருள்துணையோடு வாழும் போது ஆவியின் கனிகளால் நிரப்பப்பட்டு தன் வாழ்விலும், மற்றவர்கள் வாழ்விலும் சுவை உள்ளவனாகத் திகழ்கின்றான்.**

88. தூய ஆவியின் "விமரிசை" என்னும் கொடையினைக் கொண்டு உமது வாழ்வில் எவ்விதம் செயற்படுவீர்?

**நல்லவற்றைத் தேர்ந்து தெளிதல், தீயனவற்றை இனங்கண்டு அகற்றுதல் மூலம் கெட்ட விடயங்களை அகற்றி நல்லவற்றின் படி வாழ்வேன்**

89. இன்றைய காலத்தில் நாம் வாழும் உலக சூழலை அறிந்து, அதன் அடிப்படையில் கடவுளின் அரசினை உருவாக்குவதற்கு எமக்கு தூய ஆவியின் எவ்விதமான கொடை தேவை? **அறிவு**

90. இன, மொழி, நிறம், சமயம் அனைத்தையும் கடந்து செயலாற்றும் உன்னதமான உணர்வு யாது? **பரிவு**

91. அன்பு என்றால் என்ன?

**எந்த ஒரு நிலையிலும் நாம் எடுத்த தீர்மானங்களுக்கும் கொடுத்த வாக்குறுதிகளுக்கும் பிரமாணிக்கமாக வாழ்வது ஆகும்.**

92. மகிழ்ச்சி என்றால் என்ன?**தூய ஆவியின் கனிகளில் ஒன்றாகும். தூய ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் என்றும் மகிழ்ச்சியுடனேயே இருப்பார்கள். இயேசு என்றுமே தூய ஆவியாரால் மகிழ்ச்சியில் நிறைந்தவராய் இருந்தார்.**

93. கனிவு என்பது பற்றி நீர் என்ன விளங்குகின்றீர்?**கனிவு என்பது சாந்தம், இது இறையரசின் இன்றியமையாத பண்பு. இப்பண்பு உடையவர்கள்பிறருடன் பழகும் போது உண்மையான அன்புடன் பழகுவர். அதில் ஆழமிருக்கும். இவரது நெஞ்சில் நேர்மையும், நாணயமும் இருக்கும், எந்த நெருக்கடியிலும் இவர் நிலை குலையமாட்டார்.**

94. தூய ஆவியின் கனிகளால் நீர் அலங்கரிக்கப்பட செய்ய வேண்டியது என்ன?

**தூய ஆவியின் கனிகளால் நிரம்பப் பெற்றவராய் வாழ்வதற்கு நாம் துடிப்போடும், விழிப்போடும் கருத்தொருமித்தவராய் வாழ வேண்டும்.**

95. **"உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சிமை உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக"**

**96. "அமைதியை ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதி என்னும் கனி விளைகிறது"**

**97.** "தூய ஆவியின் வழியாகக் கடவுளின் **அன்பு**நம் **உள்ளத்தில்** பொழியப்பட்டுள்ளது"

98. "அன்பு பொறுமையுள்ளது. அனைத்தையும் தாங்கிக்கொள்ளும். அனைத்தையும்பொறுத்துக்கொள்ளும்"

99. "நான் மானிடரின் மொழிகளிலும் **வானதூதர்களின் மொழிகளிலும்**பேசினாலும் **அன்பு** எனக்கில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன்"

100. "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். **தந்தை, மகன், தூய ஆவியின்**பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்"

101."உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோயில் என்று தெரியாதா?

102. இறைவன் மனிதனை ஏதேன் தோட்டத்தில் குடியிருக்கச் செய்த காரணம் என்ன?
**ஏதேன் தோட்டத்தைப் பயன்படுத்தவும் பாதுகாக்கவும் மனிதனை அங்கு குடியிருக்கச் செய்தார்.**

103. வாழ்க்கையில் வரும் சவால்களை சந்திப்பதற்கு எமக்கு அவசியம் தேவையாய் உள்ளது யாது?**இறை சக்தி**

104. இறைசக்தியைக் கெற்றுக் கொள்ள அவசியமானது எது? **செபம்**

105. நாம் - மற்றவர்களுடன் முரண்பட்ட நிலை எவ்வாறு உறவை வளர்த்துக் கொள்ளலாம்?
**செபத்தின் மூலம் உறவை வளர்த்துக் கொள்ளலாம்.**

106. வலுவற்ற நிலையில் நமக்காக தூயஆவியானவர் பரிந்துபேசி செபிக்கக் காரணம் என்ன?
**வலுவற்ற நிலையில் எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. அந்நேரத்தில் தூய ஆவியார் தாமே சொல் வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுக்களின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகின்றார்.**

107. பூரண செபவாழ்வு வாழ நாம் செய்யவேண்டியவைகள் யாவை?

- இடைவிடாது செபித்தல்
- உற்சாகத்துடன் செபித்தல்
- ஒன்றுசேர்ந்து செபித்தல்
- தனிமையில் செபித்தல்
- மன்னிப்பு வேண்டுதல்
- தேவையானவற்றைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளல்

108. தூய ஆவியாரால் நிரப்பப்பட என்ன செய்ய வேண்டும்?

தூய ஆவியாரைப் புரிந்து, தாகத்தோடு கேட்டல், தாழ்ச்சியுடன் அர்ப்பணித்து செபித்தல், தூய ஆவியைப் பெற்றுவிட்டோம் என்ற நம்பிக்கையுடன் நடத்தல்.

109. தூயஆவியாரைப் புரிந்து தாகத்தோடு கேட்பது பற்றிய உமது கருத்துக்களைக் கூறுக?

எமது வலுவற்ற நிலையில் நமக்காகப் பரிந்து பேசுபவர் தூய ஆவியார்.எம்மை நேரிய பாதையில் நடத்துபவரும் அவரே. எனவே தூய ஆவியால் நிரப்பப்படுவதற்கு நாம் தாகமாக இருக்க வேண்டும். 'மாந்தர் யாவர் மேலும் நம் ஆவியைப் பொழிந்திடுவோம்' எனும் வாக்கின்படி எம்மேல் தூய ஆவியைப் பொழியும் படி கேட்க வேண்டும்.

110.தாழ்ச்சியுடன் அர்ப்பணித்து செபித்தல் என்றால் என்ன?

நான் பாவி, தூய ஆவியினால் நிரப்பப்பட நான் தகுதியற்றவன் என்பதை உணர்ந்து மனந் திருந்தி, எமது பாவங்களை அறிக்கையிட்டு, எம்மை முழுமையாக அர்ப்பணித்து தாழ்ச்சியுடன் செபிக்க வேண்டும். அவ்வாறு செபிக்கும் போதே நாம் தூய ஆவியால் நிரப்ப்பட முடீயும்.

111.தூய ஆவியைப் பெற்றுவிட்டோம் என்ற நம்பிக்கையுடன் செபிப்பது எவ்வாறு?

"நீங்கள் இறைவனிடம் எவற்றையெல்லாம் கேட்பீர்களோ அவற்றைப் பெற்று விட்டீர்கள் என நம்புங்கள்" என்ற வாக்கின் படி தூய ஆவியை நாம் பெற்றுவிட்டோம் எனும் நம்பிக்கையுடன் கேட்கும் போது தூய ஆவியார் நம்மில் செயற்பட ஆரம்பித்து விடுகிறார்.

112."ஏனெனில் தீயோராகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நன்கொடைகள் அளிக்க அறிந்திருக்கின்றீர்கள். அப்படியானால் விண்ணகத்தந்தை தம்மிடம் கேட்போருக்கு தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி"

113."உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்"

114.நிலைவாழ்வைப் பெற விரும்புகிறவர்கள் செய்ய வேண்டியது என்ன?

**ஆவிக்குரிய இயல்பு வெளிப்படும்படியான செயல்களை செய்ய வேண்டும்**

115.நாம் விரும்புவதை எம்மால் செய்ய முடியாமல் இருப்பதற்கு காரணம் என்ன?

**தூய ஆவியின் விருப்பம் ஊனியல்புக்கு முரணாய் இருப்பதால் நாம் செய்ய விருப்புவதை நம்மால் செய்ய முடிவதில்லை.**

116.ஊனியல்பின் செயல்கள் யாவை?**பரத்தமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் (கலா 5:19-21) முதலியனவாகும்.**

117.ஆவிக்குரிய இயல்புக்கு உரியவர்களாய் வாழவேண்டுமெனில் ஊனியல்பை மேற்கொள்ள சிறந்த கருவி என்ன?

**ஊனியல்பை மேற்கொள்ள சிறந்த கருவி சிலுவை ஆகும்.**

118.ஊனியல்பின் மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது சாவு. ஆனால் ஆவிக்குரிய மனநிலை கொண்டிருப்போர் பெற்றுக்கொள்வது யாது? **வாழ்வும் அமைதியும்**

119.**"கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பைஅதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள்"**

120.மனமாற்றத்தின் இனிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு அவசியம் தேவையானது யாது?**இறைவனின் அருளும் வழிநடத்தலும் அவசியமாகும்**

121."மனமாற்றம்" என்பது எமக்கு தெளிவாகக குறிப்பிட்டு கூறுவது யாது?

**எமது சிந்தனை, சொல், செயலில் ஏற்படும் முழு மாற்றத்தைக் குறிக்கின்றது.**

122.மனமாற்றம் அடைந்த மனிதனின் வாழ்வில் காணப்படும் மாற்றம் என்ன?

**மனமாற்றம் அடைந்த மனிதனின் வாழ்வில் அன்பு மாற்றம் காணப்படுகின்றது. அதாவது சுய அன்பு பிறரன்பாகவும், இறையன்பாகவும் காணப்படுகின்றது.**

123.மனமாற்றத்திற்கு அடிப்படைத் தேவையாக இருப்பவைகள் யாவை?

**பாவத்திற்கு மனம் வருந்துதல்,முழு இதயத்தோடு பழைய வழிகளை விடுதல், புதிய வாழ்விற்கு ஏதுவான நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல், பாவத்திற்குப் பரிகாரமாக உண்ணாநோன்பிருத்தல்.**

124.**"ஏதேன் தோட்டத்தைப் பன்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்"**

125.மறுபடியும் பிறத்தல் என்பதன் அர்த்தம் என்ன?

**மறுபடியும் பிறத்தல் என்பது தூய ஆவியால் பிறக்கின்ற வாழ்வு.**

126.நமது பழைய இயல்பில் மாற்றம் காண வேண்டுமெனில் நமக்கு துணை நிற்க வேண்டியவர் யார்?**தூய ஆவியானவர்**

127.நமது மனித இயல்பு மாற்றத்திற்கு அடிப்படைக காரணமாக அமைய வேண்டியது யாது?**மனப்பாங்கு மாற்றம் காண வேண்டும், உள்ளம் முற்றிலும் புதுப்பிக்கப்பட வேண்டும்.**

128.நாம் புதிதாய் படைக்கப்பட்டவராய் இருக்கும் போது நம்மில் தோன்றும் மாற்றம் என்ன?**கிறிஸ்துவோடு இணைந்திருத்தல், நமது இதயத்தைத் திறந்து இறைவன் முன் பழையவற்றைக் கொண்டு வருதல், இறையாட்சிக்குரிய நாட்டத்தைக் கொண்டிருத்தல்.**

129.**"உங்கள் முந்தின நடத்தையை மாற்றி, தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதனுக்குரிய இயல்பைக் களைந்து விடுங்கள்"**

130.தூய ஆவியின் இயல்பு நம்மில் குடிகொண்டிருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?
**கிறிஸ்துவை உள்ளத்தில் கொண்டு, தூய ஆவியாரை உயிராய் கொண்டு, இறந்த நிலையிலிருந்து வாழ்வும் அமைதியும் பெறும் நிலைக்கு உயர வேண்டும்**

131.நம்மில் தூய ஆவியார் வந்த பிற்பாடு, ஊனியல்பின் செயல்களால் நம் மனச்சான்று செத்துவிட்ட நிலையில் அவர் எவ்வாறு நம்மில் செயலாற்றுவார்?
**ஊனியல்பின் செயல்களால் நம் மனச்சான்று செத்துவிட்ட நிலையில் எது பாவம் என்று உணராமல் போனாலும் தூய ஆவியார் வந்த பிறகு பாவம் யாரைச் சாரும் என்று தெளிவாக்கித் தருவார்.**

132.தூய ஆவிக்கு எதிரான மன்னிக்க முடியாத பாவம் என்ன?**அவநம்பிக்கை அதாவது மனக்கடினம்**

133.நாம் ஏன் தூய ஆவியாருக்கு துயரம் வருவிக்கக் கூடாது?
**மீட்பு நாளை முன்னிட்டு எங்கள் மீது பொறிக்கப்பட்ட முத்திரையாக அவர் இருப்பதால்**

134. அருள் நிலையில் படைக்கப்பட்ட மனிதன் அவ்வருள் நிலையை இழக்கக் காரணம் என்ன?**அலகையால் ஏமாற்றப்பட்டு கடவுளின் கட்டளையை மீறி பாவம் செய்ததால் அருள் நிலையை இழந்தான்.**

135.இறை உறவின் முறிவின் நிலைகள் எவை?
**சிலைவழிப்பாடு, இருமனப்பட்ட நிலை, அந்நியமாக்கப்பட்ட நிலை**

136.சிலைவழிப்பாடு என்றால் என்ன?
**சிலைவழிப்பாடு என்பது இறைவனுக்குப் பிரமாணிக்கமற்ற நிலை, படைத்தவரை மறந்துவிட்டு கடவுளால் படைக்கப்பட்ட பொருளைக் கடவுளாக நினைத்து வழிபடுவதாகும்.**

137.இருமனப்பட்ட நிலை என்றால் என்ன?

**கடவுளுக்கும் உலகிற்கும் உகந்தவராய் வாழ முற்படும் நிலை. அதாவது இறைவனுக்கும் அவருடைய சட்டதிட்டங்களுக்கும் ஏற்ற விதத்தில் வாழ முற்படுவதோடு உலகிற்கும் உலகின் மாயக் கவர்ச்சிகளுக்கும் உட்பட்டவர்களாய் வாழ்ந்து அதற்கு அடிமையாகும் நிலை.**

138.அந்நியமாக்கப்பட்ட நிலையைப் பற்றி நீர் எவ்வாறு விளங்குகின்றீர்?

**அந்நியமாக்கப்பட்ட நிலை என்பது உறவின் முறிவு. தொடக்கத்திலே மனிதன் தன்னுடனும், பிறருடனும், இயற்கையுடனும், இறைவனுடனும் ஒன்றிய நிலையில் இருந்தான். பாவத்திற்குப் பின் அவன் எல்லா மட்டங்களிலும் பிளவுபட்டு அந்நியமாக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். அந்நியமாக்கப்பட்ட நிலைக்கு அடிப்படையாக அமைவது மனிதனின் பாவமாகும்.**

139.**"நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய் அப்பா! கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன், உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்".**

140.நமது உள்ளத்தை உருக்குலைக்கும் பாவநோய்க்குக் காரணம் யார்? அதிலிருந்து விடுதலை பெற நாம் செய்ய வேண்டியது என்ன?

**நாம்,ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்**

141.நாம் ஆன்ம சோதனை செய்வது எவ்வாறு?

**இறைதந்தையின் இரக்கத்தையும் அன்பையும் ஆழமாகத் தியானித்து, ஆன்ம சோதனை செய்ய வேண்டும்**

142.மனத்துயர் என்றால் என்ன?

**செய்த பாவத்தின் மீது உளமார்ந்த வேதனையும் வெறுப்பும் அத்தோடு இனிமேல் பாவம் செய்வதில்லை என்ற மன உறுதியுமாகும்.**

143.பாவ அறிக்கை செய்ய வேண்டியதன் அவசியம் என்ன?

**உள்ளத்தை அரித்து ஆன்மாவைச் சாகடிக்கும் பாவமாகிய தொழுநோயிலிருந்து விடுதலை பெற பாவ அறிக்கை செய்ய வேண்டும்**

144.நமது மனமாற்றம் முழுமைபெற நாம் செய்ய வேண்டியது என்ன?

**செய்த குற்றங்களுக்குப் பரிகாரம் செய்து இழைத்த தீங்கிற்கு ஈடு செய்வதுடன் நாம் திருந்திய வாழ்க்கை வாழ வேண்டும்.**

145.எமக்குப் பாவப்பொறுத்தல் எவ்வாறு கிடைக்கின்றது? **இரக்கம் நிறைந்த இறைதந்தை தம் திருமகனின் இறப்பினாலும், உயிர்ப்பினாலும் உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கி,**

**பாவமன்னிப்புக்காகத் தூயஆவியைப் பொழிந்தருளி, திருச்சபையின் திருப்பணி வழியாக மன்னிப்பும் சமாதானமும் அருளுகின்றார். இதன் வழியாகவே நமக்குப் பாவப்பொறுத்தல் கிடைக்கின்றது.**

146. தூயஆவி எவ்வாறு செயலாற்றுகிறார்?

**வாழ்க்கை நிகழ்ச்சிகள் வழியாக, மனச்சான்றின் வழியாக, பெற்றோர்கள், பெரியோர்கள் வழியாக, ஆசிரியர்கள் நண்பர்கள் வழியாக செயலாற்றுகிறார்**

147. தூயஆவியைப் பெற நீ செய்ய வேண்டியவைகள் எவை?

**எனது சுயநலம், அகங்காரம், பயம், நம்பிக்கையின்மை,ஈடுபாடின்மை போன்ற கட்டுகளிலிருந்து விடுதலை பெற வேண்டும்.**

148. நாம் எப்போதும் எமது மனதில் இருத்த வேண்டியவைகள் எவை?

**தூயஆவியின் குரலுக்கு செவிமடுக்க வேண்டும், எனக்குள் இருக்கும் பலவீனங்கள், குறைபாடுகளைக் கண்டறிந்து அதிலிருந்து விடுபடல் வேண்டும், நற்செயல்கள் வழியாக என்னுள் இயங்கும் தூயஆவியாரை வெளிப்படுத்த வேண்டும், சமூக அநீதிகளால் புரையோடிப்போன சமுதாயத்தை மாற்றியே ஆக வேண்டும்,தூயஆவியின் ஆற்றலாக மாற வேண்டும்.**

149. இயேசு விண்ணேற்றமடைய முன் திருத்தூதர்களுக்கு கொடுத்த இறுதிக்கட்டளை யாது?
**“நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்.”**

150.தூய பேதுரு தமது முதல் அருளுரையில் இயேசுகிறிஸ்துவுக்கு எவ்வாறு சான்று பகர்ந்தார்?
**“கடவுள் அனுப்பிய இயேசுவை நீங்கள் கொலை செய்தீர்கள் ஆனால் கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்”**

151. இயேசுவைப் பற்றி பேசக்கூடாது என தலைமைக்குருக்கள் திருத்தூதர்களை அச்சுறுத்திய வேளையில் அவர்கள் கூறிய வார்த்தைகள் என்ன? **“என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது” என்றனர்**

**152.** அனனியா பவுலிடம் சாட்சிய வாழ்வு பற்றி கூறியது என்ன? **“நீர் கண்டவைகளுக்கும் கேட்டவைகளுக்கும் அனைவர் முன்பும் நீர் சாட்சியாய் இருக்க வேண்டும்”**

153. கல்வி என்பது என்ன? **ஆசிரியனும் மாணவனும் உண்மையைச் சந்திக்கும் ஒரு முனைவு தான் கல்வி.**

154. கல்வி என்னும் போது ஆசிரியர், மாணவர் சாட்சிய வாழ்வு எப்படிப்பட்டதாக அமைய வேண்டும்?

**ஆசிரியர் எங்கும், என்றும், எதிலும் தன்னை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தனது கடமையில் உண்மையுடன் ஈடுபட்டு உழைக்க வேண்டும். மாணவனும் எங்கும், என்றும், எதிலும் தனது கல்வியில், கடமையில் தயார் நிலையில் உண்மையோடு ஈடுபட்டு உழைக்க வேண்டும்**

155. மூவொரு இறைவனின் பணி வாழ்வு ஆவியானவரின் ஆற்றலோடு எவ்விதம் ஆரம்பமானது என்பதைக் கூறுக?

**இறைதந்தையின் பணிவாழ்வின் தொடக்கத்திலே நீர்த்ததிரளின் மேல் கடவுளின் ஆவி அசைவாடிக்கொண்டிந்தார் இயேசுவின் பணிவாழ்வின் தொடக்கமும் இயேசு தூயஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் தான் ஆரம்பமானது. (இயேசு தூயஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றை விட்டுத் திரும்பினார்)**

156. நாம் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டுதான் இயேசுவின் பணி வாழ்வை தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம். அதன் காரணம் என்ன? **தந்தை, மகன் மற்றும் திருத்தூதர்கள் தூயஆவியின் துணையோடு பணியைத் தொடங்கி அவரின் ஆற்றலோடு செய்து முடித்தனர். நாமும் தூயஆவியின் பிரசன்னத்தை உணர்ந்து அவரது ஆற்றலைப் பெற்று அர்ப்பணத்துடன் பணிவாழ்வைத் தொடங்கும் போது அது நிச்சயம் வெற்றி தருமாகையால் தூயஆவியைப் பெற்று பணியைத் தொடங்க வேண்டும் என இயேசு வரும்புகிறார்.**

157. நாம் காலத்தின் தேவையை அறிந்து என்னென்ன பணிகளை ஆற்றலாம் என்பதை முன்வைக்குக? **மது அடிமைகளுக்கு புது வாழ்வு அளித்தல், பிரச்சினையில் உள்ளோருக்கு ஆலோசனை வழங்குதல், மனநோயாளிளுக்கு வாழ்வு அளித்தல், ஊனமுற்றோருக்கு நம்பிக்கை கொடுத்தல், நற்செய்தியைப் பறைசாற்றல், சமுகச் சீர்கேடுகளைச் சீர்ப்படுத்தல், மனித நேயக் குழுக்களில் பணிபுரிதல், இரத்ததானம், கண்தானம், கல்வியை இடைநிறுத்தியோர் அதனைத் தொடர உதவுதல்.**

158. நாம் செய்யும் பணிகள் மதிப்புப் பெற்றவைகளாக விளங்குவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? **காலத்தின் தேவை அறிந்து பணி செய்தல் வேண்டும்.**

159. பங்கு என்றால் என்ன? **திருமுழுக்கு பெற்ற அனைவரும் ஒன்றிணைந்து வாழும் உறவுச் சங்கமமே பங்கு என அழைக்கப்படுகின்றது.**

160. பங்கு இறைவார்த்தையினால் இணைந்த சமூகம் எப்படி?

**இறைவார்த்தையானது மனமாற்றத்திற்கும் கிறிஸ்துவின் மதிப்பீடுகளின்படி வாழவும் தூண்டுகின்றது. அத்துடன் பங்கினுடைய வளர்ச்சியின் அளவுகோலாகவும் இறைவார்த்தை விளங்குவதால் பங்கு இறைவார்த்தையினால் இணைந்த சமூகமாக உள்ளது.**

161.பங்கு மக்கள் ஏன் கூடிச் செபிக்க வேண்டும்?

**ஒவ்வொரு பங்கும் உயிர்த்துடிப்புள்ள சமூகமாக உருவாக செபம் அவசியமாகும். செபமானது இறைவனோடும் மனிதனோடும் ஆழ்ந்த உறவு கொண்டு வாழ்வதற்கு தேவையான ஆற்றறலைத் தருகின்றது. இறை மனித உறவின் ஆழ்நத அனுபவத்தைப் பெறுவதற்கு பங்கு மக்கள் கூடிச் செபிக்க வேண்டும்**

162.பங்கு எவ்வாறு நற்கருணை சமூகமாகின்றது? **நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்குபெறும் மக்கள் பலராயினும் அனைவரும் ஒரே சமூகமாகின்றனர். இந்த இணைப்பினால் பங்கு கிறிஸ்துவின் உடலாகவும், மக்கள் அதன் உறுப்புக்களாகவும் மாறுகின்றனர். இவ்வாறு பங்கு நற்கருணைச சமூகமாகின்றது.**

163.பங்கு மக்கள் ஏன் பகிர்ந்து வாழ அழைக்கப்பட்டனர்? **கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்து அதற்காகத் தம்மைக் கையளித்து பகிர்ந்தது போல கிறிஸ்துவின் உடன்படிக்கை உறவில் வாழ்கின்ற பங்கு மக்கள், தம் பங்கில் ஒருவரை ஒருவர் சகோதரர்களாக ஏற்று அன்பில் இணைந்து, பகிர்ந்து வாழ வேண்டும்.**

164.நீ பிற மறையினரோடு எவ்வாறு நல்லுறவை வளர்த்துக் கொள்ளலாம்?

**பங்கிலே நடைபெறும் பல்வேறு சமூகப்பணிகளை பிறமறையினருடன் நல்லுறவு கொண்டு, இணைந்து திட்டமிட்டு செயற்படுத்தலாம்.**

165.உறுதிப்பூசுதல் பங்கு சமூகத்தின் கொண்டாட்டம் எவ்வாறு? **உறுதிப்பூசுதல் பெறுவோர் பங்குச் சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் இறையரசின் வளர்ச்சிக்காகவும் தங்கள் வாழ்வை அர்ப்பணிப்பதை உணர்த்துவதால் இறைமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து உறுதிப்பூசுதல் கொண்டாட்டத்தில் பங்குகொள்வதால் இது பங்கு சமூகத்தின் கொண்டாட்டமாக அமைகின்றது.**

166.உறுதிப்பூசுதல் நிறைவேற்றுபவர் யார்?

**ஆயர் (தேவைப்படுமிடத்து ஆயரின் அனுமதியுடன் குருக்களும் நிறைவேற்றலாம்)**

167.ஞானப்பெற்றோர் ஏன் உறுதிப்பூசுதல் கொண்டாட்டத்தில் பங்கு கொள்கின்றனர்?

**ஞானப்பிள்ளையின் விசுவாச வளர்ச்சியில் அவர்களுக்குள்ள கடமையையும் பொறுப்புணர்வையும் வெளிப்படுத்துவதற்காக**

168.தலைமீது கை வைத்தல், திரு எண்ணெய் பூசுதல் ஆகியவற்றின் உட்பொருள் என்ன?

**தலைமீது கை வைத்தல் - நம்பிக்கையில் உறுதிப்படுத்துவதையும்,**

**திரு எண்ணெய் பூசுதல் - கிறிஸ்துவின் பணிக்காக திருநிலைப்படுத்துவதையும் குறிக்கின்றது.**

169.உறுதிப்பூசுதல்கொண்டாட்டத்தின் பகுதிகள் யாவை?

- **தொடக்கச் சடங்கு**
- **இறைவாக்கு வழிபாடு**
- **உறுதிப்பூசுதல் அளித்தல்**
- **சடங்கின் முடிவு**

170.உறுதிப்பூசுதலின் போது பயன்படுத்தப்படும் தைலம் ஏது? **கிறிஸ்மா தைலம்**

171.உறுதிப்பூசுதலின் கிறிஸ்மா எண்ணெயால் சிலுவை வரைந்து கொண்டு கூறும் வார்த்தை யாது?

**“தூய ஆவியின் முத்திரையைப் பெற்றுக்கொள் பரம தந்தையின் உன்னதகொடை அவரே”**

திருமதி.ர.அன்ரனீற்ரா

யாழ் மறையாசிரியர்

(நாவற்குழி)